

தியாகராயர் நகர் மேற்கு பகுதியை சார்ந்த சென்னை ஒருங்கிணைந்த மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர், முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினரும் , முன்னாள் மண்டல 8 குழு தலைவர் மறைந்த செ. கண்ணப்பன் உடலுக்கு மலரஞ்சலியினை தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்பு செயலாளர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி அஞ்சலி செலுத்தினார் . உடன் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு , ஜெ .கருணாநிதி எம்.எல்.ஏ, கே .ஏழுமலை எம்.சி, கோ.சு .மணி, வட்டச் செயலாளர்கள் தட்சன் ஹரிஹரன், எம்.கே.கிருஷ்ணமூர்த்தி, பி.மாரி, பி .ஜெயக்குமார்,பாபா சுரேஷ், இரா .பொன்னிவளவன் மற்றும் மேடவாக்கம் பெருமாள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 4,37 கோடி செலவில்

# உயர் மருத்துவ உபகரணங்கள் - உடற் கூறாய்வு மையம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் — பி.மூர்த்தி திறந்து வைத்தனர்!

மதுரை, ஜன.12 –

மதுரை மாவட்டம் ரூபாய் 4.37 கோடி செலவில் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உடற்கூறாய்வு மையத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் திறந்து வைத்தனர்.

மதுரை மாவட்டம், ரூபாய் 4.37 கோடி செலவில் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உடற்கூறாய்வு மையத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேற்று (10.01.2026) திறந்து வைத்தனர்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி ஆகியோர் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.36 கோடி மதிப்பில் மண்டல புற்றுநோய் மையம் கட்டடம் கட்டுவதற்கான, இடம் தேர்வுக்கான ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவிக்கையில்:

மதுரை அரசு இராசாசி மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை பொதுமக்களிடையே மிகப்பெரிய அளவிலான வரவேற்பைப் பெற்று மிகப்பெரிய அளவிலான மருத்துவ சேவையை வழங்கி வருகிறது. அந்த வகையில் நாள்தோறும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு பல்வேறு வகைகளில் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கட்டமைப்பு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது.

கட்டிட வசதிகளாக இருந்தாலும் அதிநவீன கருவிகளாக இருந்தாலும் தொடர்ந்து இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் பொருத்தப் பட்டு பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை கடந்த ஓராண்டில் மட்டும் இங்கே சி.டி ஸ்கேன் (CT Scan) எடுக்கப்பட்டிருப்பவர்களுடைய எண்ணிக்கை நாள்தோறும் சராசரியாக 400க்கும் மேல் என்கின்ற வகையில் ஒன்றரை லட்சம் சி.டி ஸ்கேன்கள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து சி.டி ஸ்கேன்கள் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

அதேபோல் டிஜிட்டல் எக்ஸ்ரே (Digital Xray), அதுவுமே நாள்தோறும் 1,000 என்கின்ற வகையில் எடுக்கப்பட்டு கடந்த ஆண்டு மட்டுமே 1,60,000க்கும் மேற்பட்ட டிஜிட்டல் எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டிருக்கிறது. சி.டி ஸ்கேன் ஒன்றரை லட்சமும், டிஜிட்டல் எக்ஸ்ரே 1,60,000 என்கின்ற வகையிலும் கடந்த ஓராண்டில் மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது. எம்.ஆர்.ஐ (MRI) ஸ்கேனைப் பொறுத்தவரை 16,000 ஸ்கேன் கடந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கிறது. 15,680 என்கின்ற வகையில் துல்லியமாக எம்.ஆர்.ஐ ஸ்கான்கள் கடந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படி எம்.ஆர்.ஐ ஆக இருந்தாலும், சி.டி ஆக இருந்தாலும் டிஜிட்டல் எக்ஸ்ரேவாக இருந்தாலும், அதன் பயன்பாடு இன்றைக்கு அதிகரித்து வருகின்ற நிலையில் இந்த மருத்துவமனையின் கட்டமைப்பையும் மருத்துவ சேவைகளின் கூடுதல் எண்ணிக்கை காரணமாகவும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இன்று காலையில் இந்த மருத்துவமனையில் கூடுதலாக 4 கோடியே 37 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு மருத்துவத் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக 2 கோடியே 81 லட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய சி.டி ஸ்கேன், 62 லட்சம் மதிப்பீட்டில் ஒரு டிஜிட்டல் எக்ஸ்ரே பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதேபோல் இங்கே இருக்கிற உடற்கூறு ஆய்வு மையம் மிகப்பெரிய அளவிலான பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் அதை நவீனப்படுத்துவது அவசியமாகிறது. எனவே அந்த உடற்கூறு ஆய்வு மையம் 93 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் இன்றைக்கு மேம்படுத்தப்பட்டிருக்கிறது. ஆக சி.டி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே, உடற்கூறு ஆய்வு மைய மேம்பாடு என்கின்ற வகையில் 4 கோடியே 37 லட்சம் மதிப்பீட்டிலான திட்டங்கள் தற்போது தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைப் பொறுத்தவரை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இதுவரை 420 கோடி ரூபாய் செலவில் பல்வேறு மருத்துவத்துறைக்கான கட்டிடங்களும், உயர் மருத்துவ உபகரணங்களும் இந்த மருத்துவமனைக்கு வாங்கித் தரப்பட்டிருக்கிறது.

313 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் இன்டர்நேஷனல் கோஆபரேஷன் ஏஜென்சி (JICA) நிதி உதவியுடன் ஆறு தளங்கள் கொண்ட புதிய டவர் பிளாக் (Tower Block) ஒன்று கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 7 கோடியே 99 லட்சம் மதிப்பீட்டில் இங்கே ஒரு புதிய கேத் லேப் (Cath Lab) கருவி ஒன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

2 கோடியே 89 லட்சம் மதிப்பீட்டில் நெஞ்சக மருத்துவ பிரிவு கட்டிடம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. 1 கோடியே 3 லட்சம் மதிப்பீட்டில் கட்டண படுக்கை தொகுதிகள் (Pay Wards) என்று சொல்லக்கூடிய வகையில் கட்டண படுக்கை தொகுதிகள் தொடங்கி வைக்கப்பட்டது. சீமாங்க் கட்டிடத்தில் பார்வையாளர்கள் அமரும் கூடம் ஒன்று 65 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அவசர ஊர்திகள் ஒரு 21 லட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. சப்பாத்தி மெஷின் (Chap pathi machine) ஒரு 2 லட்சத்து 47 ஆயிரம் மதிப்பீட்டில் பயன்பாட்டில் உள்ளது. 41 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் கல்வியியல் கூடம், ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாதோருக்கான குடியிருப்பு கட்டிடங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டது.

அரசு மருத்துவ கூடுதல் முதுநிலை மருத்துவ படிப்புக்கான மாணவர் விடுதி ஒன்று 12 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கூடுதல் மாணவியர் விடுதி 9 கோடியே 39 லட்சம் மதிப்பீட்டில், மாணவியர் விடுதி (2) 9 கோடியே 12 லட்சம் மதிப்பீட்டில், மாணவர்கள் விடுதி 8 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில், புதிய நூலக கட்டிடம் 8 கோடியே 62 லட்சம் மதிப்பீட்டில், கருத்தரங்கம் சீரமைக்கும் பணி 2 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டில், விலங்குகள் கூடம் 1 கோடியே 74 லட்சம் மதிப்பீட்டில், புதிய டெக்ஸா ஸ்கேன் (DEXA scan) கருவி 50 லட்சம் மதிப்பீட்டில்,என்று இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இதுவரை இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதனால்தான் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு மருத்துவப் பயனாளர்களின் எண்ணிக்கை என்பது பல மடங்கு உயர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வந்து கொண்டிருந்த புறப்பயாளர்களின் எண்ணிக்கை 3,000லிருந்து 4,000 வரை இருந்தது. அது தற்போது 6,500லிருந்து 7,000ஆக உயர்ந்திருக்கிறது. உள்நோயாளிகளாக 3,000லிருந்து 3,500 பேர் இங்கே தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை 4,420 படுக்கைகள் கொண்ட ஒரு பிரம்மாண்டமான மருத்துவ கட்டிடமாக இருந்து கொண்டிருக்கின்றது. அதனால் இதனுடைய மருத்துவ கட்டமைப்பை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு மேம்படுத்திக் கொண்டே இருக்கிறோம்.

இப்போது திறந்து வைக்கப்பட்ட இந்த 420 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களைத் தொடர்ந்து இன்றைக்கு 4 கோடியே 37 லட்சம் மதிப்பீட்டிலான திட்டங்கள், இதையும் தொடர்ந்து இதே மருத்துவமனையில் 43 கோடியே 70 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக ஐந்து மருத்துவ கட்டிடங்கள், உட்கட்டமைப்புகள் மேம்படுத்தும் பணியும் நடைபெற்று வருகிறது.

40 கோடி செலவில் தரைதளம் மற்றும் ஐந்து தளங்களுடன் குழந்தைகள் நலம் மற்றும் ஆராய்ச்சி மைய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த முறை நாங்கள் வந்தபோது அந்த கட்டிடத்தை ஆய்வு செய்திருக்கிறோம். இதே மருத்துவமனையில் ஒரு பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் ஒன்று 1 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாணவர்கள் விடுதியில் கழிப்பறை, சமையலறை மற்றும் கூரைகளை மேம்படுத்தும் பணிக்கு 1 கோடி திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல் இந்த நெஞ்சக பிரிவிலும் மின்தூக்கிகள் (Lift) வசதிக்கு ஒரு 67 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இப்போது நடைபெறுகிற பணிகளைப் பொறுத்தவரை 43 கோடியே 70 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதையும் தொடர்ந்து இன்னமும் நடைபெற வேண்டிய பணிகள் என்கின்ற வகையில் திட்டமிடப்பட்டிருப்பது 38 கோடி ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம், 2 கோடி செலவில் விடுதி கட்டிடத்தை மேம்படுத்துவது என்று பல பணிகள் இன்னமும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்படி நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில் ராசாசி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இன்றைக்கு மிகப்பெரிய அளவில் பயனைத் தந்து கொண்டிருக்கிறது.

இந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த மருத்துவத் துறையில் பல்வேறு புதிய திட்டங்களை, சிறப்புத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம்,பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வுத் திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என்று பல திட்டங்கள், சிறப்புத் திட்டங்கள் இந்தத் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ஒரு மிகப்பெரிய மக்களிடையே வரவேற்பைப் பெற்ற இன்னுமொரு சீரிய சிறப்புமிக்க திட்டம் 'நலம் காக்கும் ஸ்டாலின்'. இந்த நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற இந்தத் திட்டம் கடந்த ஆகஸ்ட் திங்கள் 2ஆம் தேதி முதல்வர் அவர்களால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதிலும் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மூன்று என்கின்ற வகைகளிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 என்கின்ற வகையிலும், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகளில் நான்கு என்கின்ற வகையில் ஐந்து மாநகராட்சிகளிலும், 10 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா மூன்று என்கின்ற வகையிலும் 1256 நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடத்தப்பட்த் தொடங்கியிருக்கிறது.

தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை மருத்துவ முகாம் என்றால் ஏதோ சளிக்கும் காய்ச்சலுக்குமாக மருந்து தந்தது என்கின்ற நிலை மாறி, ஒவ்வொருவருக்கும் முழு உடல் பரிசோதனை என்கின்ற அளவிலான திட்டமாகவேஇந்தத்திட்டம்பயன்பாட்டிலிருந்து வருகிறது. தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்றால் 20,000, 15,000 செலவு செய்கிற வகையிலான திட்டங்கள், அரசு மருத்துவமனைகளிலேயே 4,000 வரையில் செலவாகும் அந்தத் திட்டம் இன்றைக்கு விலையில்லாத வகையில் மக்களுக்கு மிகப்பெரிய அளவிலான பயனைத் தந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் ஒவ்வொரு வாரமும் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் தொடங்கி 23 வாரத்தில் 34 வது முறையாக இன்றைக்கு 30 மாவட்டங்களில் 44 இடங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரை சோழவந்தானில் இன்றைக்கு இந்த முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதற்குப் பிறகு நேற்றுவரை நடைபெற்று முடிந்திருக்கிற வரை நடைபெற்று முடிந்திருக்கிற முகாம்களின் எண்ணிக்கை 934. 1256 முகாம்களில் 934 முகாம்கள் நடைபெற்று முடிந்திருக்கிறது. இன்றைக்கும் 40 முகாம்கள் தமிழ்நாடு முழுவதிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் வரை இந்த முகாம்களில் 14,21,227 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இதில் இந்த முகாமில் ஒரு சிறப்பு அம்சம், முழு உடல் பரிசோதனை என்பதையும் கடந்து முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம், இந்த காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டைகளை இந்த முகாம்களுக்கு வருபவர்களுக்கு அங்கேயே விரிவான வகையில் ஆராய்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகைகளில் இந்த 23 வாரங்களில் வழங்கப்பட்டிருக்கிற புதிய முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டைகளின் எண்ணிக்கை 41,306.

அதேபோல் இன்னொரு சிறப்பு, மாற்றுத்திறனாளிகளுக்கு என்று சான்றிதழ் வாங்க வேண்டும் என்று சொன்னால் மாவட்ட ஆட்சி நிர்வாகம், வருவாய்த்துறை அலுவலர்கள், மருத்துவர்கள் என்று பல்வேறு இடங்களில் அவர்கள் அலைந்து திரிந்து அந்தச் சான்றிதழைப் பெற வேண்டும் என்பது விதி. ஆனால் தமிழக முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இந்த முகாம்களி லேயே மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரே இடத்தில் அனைத்து ஆய்வுகளும் முடிந்து அவர்களுக்கு அந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் மட்டுமே இன்றைக்கு மாற்றுத்திறனாளிகள் எத்தனை பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது என்றால் 50,968 மாற்றுத்திறனாளர் பெருமக்களுக்கு இந்த சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

38 மாவட்டங்களிலும் இந்த நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற மகத்தான திட்டம் இன்றைக்குத் திட்டமிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் கடந்த வாரம் வரை ஒரு ஆறு மாவட்டங்களில் இந்த முகாம்கள் நிறைவு பெற்றிருக்கிறது. நீலகிரி, மயிலாடுதுறை, பெரம்பலூர், காஞ்சிபுரம், திருப்பத்தூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஆறு மாவட்டங்களில் இந்த முகாம்கள் நிறைவு பெற்றிருக்கிறது. இந்த முகாம்களைப் பொறுத்தவரை பொதுமக்களுக்கு மிகப் பெரிய அளவிலான சேவைகள் என்கின்ற வகையில், பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய மருத்துவம் என்று இன்றைக்கு 17 வகையான மருத்துவ முறைகள், பரிசோதனைகள் இந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் இன்றைக்குப் பயன்பட்டு வருகிறது.

இதில் இன்னொரு கூடுதல் சிறப்பம்சம், அமைப்புசாரா தொழிலாளர்கள் கண்டுகொள்ளப்படாத ஒரு அமைப்பாகவே இருந்தது. இந்த அமைப்புசாரா தொழிலாளர்களையும் இதில் இணைத்து அவர்களுக்கும் இந்த முழு உடல் பரிசோதனை என்பது இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்து வருகிறது.

மதுரையைப் பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதிலும் 1256 முகாம்கள் என்று திட்டமிட்டிருந்தாலும், மதுரையைப் பொறுத்தவரை திட்டமிட்ட முகாம்களின் எண்ணிக்கை 43. இது வரை நிறைவு பெற்றிருக்கிற முகாம்கள் 24. இன்று சோழவந்தானில் 25 வது முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மதுரையில் மட்டுமே 33,758 பொதுமக்கள் இந்த முகாம்களின் வாயிலாகப் பயன்பெற்றிருக்கிறார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் மற்றும் அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு. அருள் சுந்தரேஷ்குமார் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# உண்மையை உரக்கச் சொல்லக்கூட முடியாத அளவுக்கு அடக்குமுறை!




**1965**ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தித் திணிப்புப் போராட்டத்தை மையமாகக் கொண்டு, அதற்கு எதிரான மாணவர்களின் எழுச்சியை ஆவணப்படுத்த வேண்டுமென்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட திரைப்படம் 'பராசக்தி'. இந்தப் படத்தில் வரும் 25 காட்சிகளை நீக்கவும், மாற்றவும் ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் பரிந்து ரைத்தது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் அவற்றை திரைப்படத் தயாரிப்புக் குழுவினர் மேற்கொண்டதையடுத்து அந்தப் படத்திற் கான 'யுஏ' சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கிறது. இதன்மூலம் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு இந்தித் திணிப்பில் மும்முரமாக செயல்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதான வெறுப்பினையும் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு கக்கி இருப்பது இதன்மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

முதலாவதாக, 'பராசக்தி' திரைப்படத்தில் 'தீ பரவட்டும்' என்ற வாக்கியம் நீக்கப்பட்டு 'நீதி பரவட்டும்' என்ற வாக்கியம் சேர்க்கப்பட்டு இருக்கிறது. 1943 ஆம் ஆண்டு கம்பராமாயணம், பெரிய புராணம் குறித்து நடைபெற்ற விவாதங்களில் பேரறிஞர் அண்ணா, திரு. ஆர்.பி. சேது பிள்ளை, திரு.சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசிய உரைகள் புத்தகமாக வெளியிடப்பட்டு அதற்கு 'தீ பரவட்டும்' என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த 'தீ பரவட்டும்' என்கிற வாக்கியம்தான் தற்போது 'பராசக்தி' திரைப்படத்தில் மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது. தீ பரவட்டும்' என்கிற வாக்கியம் நாகரிகமற்ற வார்த்தை அல்ல என்பது நன்கு தெரிந்திருந்தும், அதனை ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் நீக்கி இருக்கிறது என்றால் இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, 'அண்ணாதுரை ஆளுகிறான்' என்ற வார்த்தையும் 'பராசக்தி' படத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 1968 ஆம் ஆண்டு டிசம்பர் ஒன்றாம் தேதி சென்னை, பாலர் அரங்கத்தில் சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டியது தொடர்பாக நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "அண்ணாதுரை கொண்டு வந்தவற்றையெல்லாம் மாற்ற வேண்டுமென்று எண்ணும்போதே மக்கள் வெகுண்டெழுவார்கள் என்ற அச்சமும் கூடவே எழும் இல்லையா, அந்த அச்சம் இருக்கின்ற வரையில் இங்கே யார் ஆண்டாலும் 'அண்ணா துரை இந்த நாட்டை ஆள்கிறான்' என்று பொருள்" என்று பேசினார்.

**டாக்டர் வா.மைத்ரேயன்,**
*நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர். தி.மு.க. கல்வியாளர் அணி துணைத் தலைவர்*



இந்த வாக்கியம்தான் "பராசக்தி' திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உண்மையிலேயே இந்த நாட்டை ஆண்டார் என்பதும், அவர் ஒரு விழாவில் இதைப் பேசியிருக்கிறார் என்பதும் உண்மை. இந்த வாக்கியத்தை பயன்படுத்தக் கூடாது, இந்த உண்மை யைக்கூட சொல்லக்கூடாது என்று ஒன்றிய அரசு கூறுவது கடும் கண்டனத்திற்குரியது.

மூன்றாவதாக, 'இந்தி அரக்கி' என்ற வாசகத்தில் வருகின்ற 'அரக்கி' என்பதை வேறு விதமாக மாற்ற ஒன்றிய அரசு அறிவுறுத்தியதையடுத்து, அந்த வார்த்தையும் மாற்றப்பட்டுள்ளது. 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது கோயம்புத்தூரில் 'இந்தி அரக்கி' என்று எழுதப்பட்ட கொடும்பாவியை மாணவர்கள் இழுத்துச் சென்றனர். அந்தக் காலத்தில் இந்தி மொழி திணிக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தில் இந்தித் திணிப்புப் போராட்டம் நடைபெற்றது. இது உண்மையிலேயே நடைபெற்ற ஒரு நிகழ்வு. இந்த நிகழ்வில் வன்முறைகள் ஏதும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், 'அரக்கி' என்ற வார்த்தையை நீக்குமாறு ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் உத்தர விட்டுள்ளது கேலிக்கூத்தா னது.

அடுத்தபடியாக, 'இந்தி என் கனவை அழித்தது' என்ற வாசகத்தை மாற்றியும், 'இந்தி கத்துகிட்டு' என்ற வாசகத்தை ஒலி இழக்கச் செய்தும் ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் உத்தரவு பிறப்பி த்துள்ளது. இதுபோல் இன்னும் பல வாசகங்கள் நீக்கப்பட்டுள்ளன. மேலே குறிப் பி ட்டுள்ள அனைத்து வார்த்தைகளும் நாகரிகமான வார்த்தைகள் என்பதோடு, உண்மையை எடுத்துரைக் கும் வார்த்தைகள் என்பதை யும், நடந்தவற்றை கூறுபவை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

உண்மையான வார்த்தைகளை மாற்றி அமைக்கச் சொல்வதும், நீக்கச் சொல்வதும் ஏற்புடையதல்ல. ஒன்றிய பாரதிய ஜனதா பாசிச அரசின் நடவடிக்கைகள் ஜனநாயகத்திற்கு எதிரான செயல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, அமலாக்கத் துறை, புலனாய்வுத் துறை, வருமான வரித் துறை என்ற வரிசையில் சென்சார் போர்டையும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக ஒன்றிய அரசு பயன் படுத்துவது வெட்கக்கேடானது. இந்த பாசிசக் கொள்கையை ஒன்றிய அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசின் பாசிசக் கொள்கைக்கு தமிழ்நாட்டு மக்கள் வருகின்ற தேர்தலில் தக்கப் பாடம் புகட்ட வார்கள் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களவைத் தேர்தலைப் போல, சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஓர் இடத்தில் கூட வெற்றி பெறாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தேனி மாவட்டம் —

# போடி தொகுதியில் கபடி போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு லட்சுமணன் — அய்யப்பன் பரிசு வழங்கினர்!

*தேனி, ஜன. 12 -*

*தேனி வடக்கு மாவட்டம்போடிதொகுதி மேல சொக்கநாதபுரம்பகுதியில் மாவட்ட அளவிலான கபடி போட்டியில் பாலார் பட்டி அணி சாம்பியன் பெற்றது . வெற்றி பெற்ற அணி களுக்கு போடி மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சு மணன். கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன். ஆகியோர் பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கி னார்கள்.தேனி மாவட்டம் போடி அருகே உள்ள மேல சொக்கநாத புரத்தில் தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் போடி மேற்கு மற்றும் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்ட அளவிலான கபடி போட்டி நடைபெற்றது.*

*இப்போட்டியில் தேனி, போடி, பெரியகுளம் , கோடாங்கிபட்டி, பாலார் பட்டி, ராசிங்காபுரம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 15க்கும் மேற்பட்ட அணிகள் பங் கேற்று விறு விறுப்பாக நடைபெற்ற இறுதி போட்டியில் பாலார் பட்டி அணியும் மேலசொக்கநாதபுரம் அணியும் மோதின இதில் 15க்கு 25 புள்ளிகள் பாலார் பட்டி அணி வெற்றி பெற்றது சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.*

*இதில் முதல் இடம் பிடித்த அணிக்கு ரூபாய் 15 ஆயிர ரொக்க பணம் மற்றும் கோப்பை 2 இடம் பிடித்த அணிக்கு ரூபாய் 10 ஆயிரம் ரொக்க பணம் மற்றும் கோப்பைகளை மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன் ஆகியோர் வழங்கினார்கள்.*

*இதில் பேரூர் செயலாளர் ராஜேந்திரன் , பூதிப்புரம் பேரூராட்சி சேர்மன் , கவியரசு மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*



தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி கிழக்கு, மேற்கு ஒன்றியம் சார்பில் சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் திராவிட பொங்கல் முன்னிட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆலோசனைப்படி மேல சொக்கநாதபுரம் பேரூராட்சி பகுதியில் கபடி போட்டி நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மேற்கு ஒன்றிய செயலாளர் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் மற்றும் கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன் ஆகியோர் ரொக்க பரிசு – கோப்பைகள் வழங்கினார்கள்.